# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

(அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

அனுமதி

**மேதகு பேராயர் அந்தோணி ஆனந்தராயர்,**

**தலைவர், தமிழக ஆயர் பேரவையின்**

**திருவழிபாட்டுப் பணிக்குழு**

தயாரிப்பு


**அருள்பணி. முனைவர் S. அற்புதராஜ்**

பொதுச்செயலர்

தமிழகத் திருவழிபாட்டுப் பணிக்குழு

முப்பணி மையம், திண்டிவனம்



2020

# ஆண்டவருடைய பாடுகளின் வெள்ளி

## ( அருள்பணியாளர் இல்லாதபோது குடும்பங்களில் செபிக்க)

### முன்னுரை

கிறிஸ்துவில் பிரியமானவர்களே!

கிறிஸ்தவர்கள் என்று இந்த உலகிற்கு நம்மை வெளிப்படுத்தும் ஒரே ஒப்புயர்வற்ற அடையாளம் சிலுவை அடையாளம். அன்று பாலைநிலத்திலே வெண்கலப் பாம்பு உயர்த்தப்பட்ட பொழுது, அதை உற்றுப் பார்த்தவர்கள். உயிர் பிழைத்தார்கள். இன்று விண்ணிற்கும், மண்ணிற்கும் இடையே சிலுவையில் பாவப்பரிகார செம்மறியாக உயர்த்தப்பட்டிருக்கின்ற இயேசுவை உற்றுப் பார்க்க இந்த உலகம் அனைத்தும் கூடி இருக்கின்றது. இயேசு சிலுவையில் தன் உடலை, தன் இரத்தத்தை, தன்னை முழுவதுமாக கொடுத்து விட்டார். அவமானத்தின் சின்னமாகிய சிலுவை, இயேசுவை சுமந்ததினால் மீட்பின் கருவியாக மாறிவிட்டது. தாய்த் திரு அவையோடு சேர்ந்து நாம் அனைவரும் இயேசுவின் பாடுகள், சிலுவை, மரணம் இவற்றை சிந்திப்போம். நம் வாழ்வை மீட்பிற்குத் தகுதி உடையதாக மாற்றுவோம்.

### திருக்குழும மன்றாட்டு

தலைவர் : ஆண்டவரே,

உம் திருமகன் கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தி,

உம் அடியார்களுக்காகப் பாஸ்கா மறைநிகழ்வை ஏற்படுத்தினார்;

உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து

நிலையான பாதுகாப்பால் எங்களைப் புனிதப்படுத்துவீராக.

என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக

உம்மை மன்றாடுகின்றோம்.

## முதல் பகுதி : இறைவாக்கு வழிபாடு

### முதல் வாசகம் : எசாயா 52:13 - 53:12

*இன்றைய முதல் வாசகம் துன்புறும் ஊழியனைப் பற்றியது. இயேசு துன்புறும் ஊழியனாக கொடுமைப்படுத்தப்பட்டு, மற்றவர்களால் கைவிடப்பட்டு, இகழப்பட்டு, எந்த ஒரு சாயலும் இன்றி உருக்குலைக்கப்பட்டு, கத்தாத செம்மறியாக, நிந்தை அவமானத்துக்கு உள்ளாக்கப்படுவார்*

*என்பதை 600 ஆண்டுகளுக்கு முன்பாக, இறைவாக்காக எசாயா சொன்னதை கவனமுடன் கேட்போம்.*

## பதிலுரைத் திருப்பாடல்

**பல்லவி : தந்தையே, உம் கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்.**

ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; நான் ஒருபோதும் வெட்கமடைய விடாதேயும்; உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும். உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்; வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளினீர்.

1 ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; நான் ஒருபோதும் வெட்கமடைய விடாதேயும்; உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும்.

5 உமது கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்; வாக்குப் பிறழாத இறைவனாகிய ஆண்டவரே, நீர் என்னை மீட்டருளினீர்.

**பல்லவி**

11 என் பகைவர் அனைவரின் இகழ்ச்சிக்கு உள்ளானேன்; என்னை அடுத்திருப்போரின் பேரிழிவுக்கு ஆளானேன்; என் நண்பர்களுக்குப் பேரச்சம் வருவித்தேன்; என்னைத் தெருவில் பார்ப்போர் என்னிடமிருந்து விலகி ஓடுகின்றனர்.

12 இறந்தோர் போல் நினைவினின்று நான் அகற்றப்பட்டேன்; உடைந்துபோன மட்கலம்போல் ஆனேன். **பல்லவி**

14 ஆண்டவரே, நான் உம்மீது நம்பிக்கை வைத்துள்ளேன்; ‘நீரே என் கடவுள்’ என்று சொன்னேன்.

15 என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் உமது கையில் உள்ளது; என் எதிரிகளின் கையினின்றும் என்னைத் துன்புறுத்துவோரின் கையினின்றும் என்னை விடுவித்தருளும்.

**பல்லவி**

16 உமது முகத்தின் ஒளி அடியேன்மீது வீசும்படி செய்யும்; உமது பேரன்பால் என்னை விடுவித்தருளும்.

24 ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே, நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள்.

**பல்லவி**

## இரண்டாம் வாசகம் : எபி 4:14-16, 5:7-9

*பழைய ஏற்பாட்டில் ஒரு தலைமைக் குருவின் முக்கியப் பணி மக்களின் பாவங்களுக்காக இறைவனுக்கு பலி செலுத்துவது. எனவே, மக்களின் பாவங்களுக்கு பரிகாரமாக காணிக்கைகளையோ அல்லது விலங்குகளையோ அவர்கள் கடவுளுக்கு செலுத்தி வந்தார்கள். ஆனால், இயேசு மக்களின் பாவங்களுக்குப் பரிகாரமாக விலங்குகளை பலியாகக் கொடுக்காமல், இறைபற்று கலந்த அச்ச உணர்வால், சிலுவைச் சாவுக்குக் கீழ்ப்படிந்து, கண்ணீர் சிந்தி, தன்னையே கல்வாரியில் பலியாக ஒப்புக்கொடுத்தார். இதன் மூலம் தமக்கு கீழ்ப்படிவோர் அனைவருக்கும் பலி ஒப்புக்கொடுக்கும் ஒப்பற்ற தலைமைக் குருவாக மாறிவிட்டார் என்பதைக் கூறும் இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.*

## நற்செய்தி வாசகம் : 18:1-19:42

## பொது மன்றாட்டு

*தலைவர் : அன்புக்குரிய இறைமக்களே! திருவிழிப்புகளுக்கெல்லாம் அன்னையாகிய திருவிழிப்பு பெரிய சனி பாஸ்கா திருவிழிப்பு என்றால் (எண் 20) மன்றாட்டுகளுக்கெல்லாம் அன்னையாகிய மன்றாட்டு நாள் பெரிய வெள்ளி ஆகும். இயேசு என்றும் இறைத்தந்தையினிடத்திலே பரிந்து பேசி மன்றாடினார். இன்று 'உரத்த குரலெழுப்பி கண்ணீர் சிந்தி' (எபி 5:7) பல கருத்து களுக்காக மன்றாட திரு அவை அழைக்கிறது. ஏனெனில் இயேசு மனித சமுதாயம் முழுவதற்காகவும் சிலுவை சுமந்து, பாடுகள்பட்டு இறந்தார். அவருடைய பாடுகளின் பலன்களை நாம் அனைவரும் பெறவேண்டும் என்பதே இயேசுவின் விருப்பம். ஒவ்வொரு மன்றாட்டின் கருத்து சொன்னபிறகு, தலைவர் நம் பெயரால் செபிப்பார். இறைமக்கள் 'ஆமென்' என பதில் சொல்லவேண்டும்.*

### புனிதத் திரு அவைக்காக

அன்புமிக்க சகோதர சகோதரிகளே, இறைவனின் புனிதத் திரு அவைக்காக மன்றாடுவோம்: நம் இறைவனும் ஆண்டவருமானவர் உலகெங்கும் திரு அவைக்கு அமைதியும் ஒற்றுமையும் பாதுகாப்பும் அளித்துக் காக்க வேண்டும் எனவும், நாம் கலக்கம் இன்றி, அமைதியான வாழ்வு நடத்தி எல்லாம் வல்ல இறைத் தந்தையை மாட்சிப்படுத்த நமக்கு அருள்புரிய வேண்டும் எனவும் மன்றாடுவோமாக.

எல் : ஆண்டவரே, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

## II. திருத்தந்தைக்காக

நம் புனிதத் திருத்தந்தை (பெயர்). . . க்காக மன்றாடுவோம்:

தலைமை ஆயர் நிலைக்கு அவரைத் தேர்ந்தெடுத்த நம் இறைவனும் ஆண்டவருமானவர் கொரோனா தொற்றுநோய் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இத்தாலியையும் மற்றும் உலக நாடுகள் அனைத்தையும் வழிநடத்தும் நம் திருத்தந்தை அவர்களை இத்தொற்றுநோய் மற்றும் எவ்வகைத் தீங்கும் நெருங்காது அவரைப் பேணிக்காப்பாராக. அதனால் அவர் இறைவனின் புனித மக்களை வழிநடத்தித் தம்முடைய புனிதத் திரு அவையை வளம் பெறச் செய்ய வேண்டும் என மன்றாடுவோமாக.

## III. திருநிலைப் பணியாளர்கள், நம்பிக்கையாளருள் பல்வேறு நிலையில் உள்ளவர்கள் ஆகிய அனைவருக்காக

நம் ஆயர் (பெயர்) . . . க்காகவும், திரு அவையில் உள்ள எல்லா ஆயர்கள், அருள்பணியாளர்கள், திருத்தொண்டர்கள், நம்பிக்கையாளர் ஆகிய அனைவருக்காகவும் மன்றாடுவோமாக:

## IV. கிறிஸ்தவப் புகுமுகநிலையினருக்காக

கிறிஸ்தவப் புகுமுகநிலையினருக்காகவும் மன்றாடுவோம்:

அதனால் நம் இறைவனும் ஆண்டவருமானவர் தமது இரக்கத்தைப் பொழிந்து அவர்களுடைய இதயங்களின் செவிகளைத் திறந்து விடுவாராக; இவ்வாறு அவர்கள், புதுப் பிறப்பு அளிக்கும் திருமுழுக்கினால், தங்கள் பாவங்களுக்கெல்லாம் மன்னிப்பு அடைந்து, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றிணைய வேண்டும் என மன்றாடுவோமாக.

## V. கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக

கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டுள்ள நம் சகோதரர் சகோதரிகள் அனைவருக்காகவும் மன்றாடுவோம்:

நம் இறைவனும் ஆண்டவருமானவர் அவர்களை உண்மையின் பாதையில் வழிநடத்தித் தமது ஒரே திரு அவையில் கூட்டிச்சேர்த்துக் காத்தருள வேண்டும் என மன்றாடுவோமாக.

## VI. யூத மக்களுக்காக

யூத மக்களுக்காகவும் மன்றாடுவோம்:

முற்காலத்தில் அவர்களோடு பேசிய நம் இறைவனாகிய ஆண்டவர், தமது பெயரின் மீதுள்ள அன்பிலும் தமது உடன்படிக்கைமீதுள்ள நம்பிக்கையிலும் அவர்களை வளர்ச்சி அடையச் செய்தருள வேண்டும் என மன்றாடுவோமாக.

## VII. கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்காக

கிறிஸ்துவில் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்காகவும் மன்றாடுவோம்:

தூய ஆவியாரின் ஒளியைப் பெற்று, அவர்களும் மீட்புப் பாதைக்கு வந்துசேர வேண்டும் என மன்றாடுவோமாக.

## VIII. கடவுளை நம்பாதவர்களுக்காக

கடவுளைக் கண்டறிய முடியாது என்பவர்களுக்காகவும் மன்றாடுவோம்:

அவர்கள் நேர்மையான இதயத்தோடு நன்னெறியில் வாழ்ந்து, கடவுளைக் கண்டடையுமாறு மன்றாடுவோமாக.

## IX. நாடுகளை ஆள்வோருக்காக

நாடுகளை ஆளும் அனைவருக்காகவும் மன்றாடுவோம்:

நம் இறைவனும் ஆண்டவருமானவர் தமது திருவுளப்படி உண்மையான அமைதியும் உரிமை வாழ்வும் அவர்கள் பெறும் பொருட்டு, நம் நாட்டுத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகள், காவல்துறையினர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் அனைவரும் கொரோனா தொற்றுநோயின் கொடூரத்தில் இருந்து மக்களைக் காப்பாற்ற எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் கூட இருந்து வழிநடத்த வேண்டும் என மன்றாடுவோமாக.

## X. துன்புறுவோருக்காக

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே, துன்புறும் அனைவருக்காகவும் எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளிடம் மன்றாடுவோம்:

தவறுகள் அனைத்திலிருந்தும் உலகைத் தூய்மைப்படுத்தவும் பிணிகள் நீங்கி, பஞ்சம் ஒழியவும், சிறைகள் திறக்கப்பட்டுத் தளைகள் தகர்க்கப்படவும், வழிப்போக்கர் பாதுகாப்புப் பெறவும், பயணம் செய்வோர்

நலமாக வீடு திரும்பவும், குறிப்பாக கொரோனா தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டு வாழ்வுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உயிரையும் காப்பாற்றவும், இத்தொற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிலிருந்து மீண்டு நலம் பெறவும், இத்தொற்றுநோயினால் இறந்தவர்கள் நிலைவாழ்வின் பேரின்பத்தை அடைய வேண்டும் எனவும் மன்றாடுவோமாக.

தலைவர் : நம்முடைய தனிப்பட்ட தேவைகளுக்காக அமைதியாக வேண்டுவோம் (அமைதி)

தலைவர் : மன்றாடுவோமாக : இரக்கம் நிறைந்த இறைவா, உம்முடைய பிள்ளைகளாகிய நாங்கள் உம்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு எழுப்பியுள்ள இந்த வேண்டுதல்களுக்கு கனிவுடன் செவிசாய்த்தருளும். எங்களை எந்நாளும் காத்து வழிநடத்தி வருகின்ற எம் தந்தையே, உமது வள்ளன்மையால் நாங்கள் உம் அருள்வரங்களை நிறைவாகப் பெற்று மகிழ்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல் : ஆமென்.

## திருவுணவின் நினைவு

தலைவர் : கடவுளை நம் தந்தையென அழைக்க இயேசு நமக்குக் கற்பித்தார். எனவே, நம் தந்தையாகிய இறைவனைப் போற்றவும், இறையாட்சி இவ்வுலகில் வளரவும் இயேசு கற்றுத்தந்த மன்றாட்டைச் சொல்வோம்.

எல் : விண்ணுலகில் இருக்கிற. . . . . (பாடலாம்)

தலைவர் : இப்போது, ஆண்டவர் இயேசு நம் உள்ளத்தில் எழுந்தருளிவர, அனைவரும் சேர்ந்து மன்றாடுவோம்.

எல் : “ஆண்டவரே, / நீர் என் இல்லத்தில் எழுந்தருள / நான் தகுதியற்றவன். / ஆனால் ஒரு வார்த்தை மட்டும் சொல்லியருளும்” / என்று நூற்றுவர் தலைவர் செபித்ததுபோல, / நாங்களும் இப்போது / உம் திருப்பாதம் பணிந்து வேண்டுகிறோம். / இனிய இயேசுவே! / நாங்கள் தகுதியற்றவர்களாய் இருந்தாலும், / எங்கள் தகுதியின்மையைப் பாராமல் / நீர் எங்கள் உள்ளங்களில் எழுந்து வாரும். / உம் அன்பிலும் அருளிலும் நாங்கள் நிலைத்திருக்க / எம்முள் எழுந்துவாரும். / உம் பிள்ளைகளாக, / உயிருள்ள உண்மைச் சாட்சிகளாக, / உமது நற்செய்தியின்படி வாழ்பவர்களாக / எங்களை உருமாற்ற வாரும். / தந்தையின் திருவுளப்படி வாழ்ந்திட / எங்களுக்குத் துணைபுரிந்திட வாரும். / நன்மை செய்வதில் ஆர்வமுள்ளவர்களாய், / தீமைகள் அனைத்திலிருந்தும் விடுதலை

பெற்றவர்களாய் வாழவும் / எங்களை வழிநடத்த வாரும். / எல்லா நலன்களாலும் வளங்களாலும் எங்களை நிரப்ப வாரும் / – ஆமென்.

### சிறிது நேரம் அனைவரும் அமைதியாக மன்றாடுதல்

பாடல் : பொருத்தமான பாடல் பாடலாம்.

### இறுதி மன்றாட்டு

தலைவர் : மன்றாடுவோமாக : ஆண்டவரே, எங்களது உயிர்ப்பின் நம்பிக்கையில் உம் திருமகனின் சாவை நினைவுகூர்ந்துள்ள எங்கள்மீது உமது ஆசி நிறைவாய் இறங்கிட உம்மை வேண்டுகின்றோம்: எங்களுக்கு மன்னிப்பு கிடைப்பதாக; நாங்கள் ஆறுதல் அடைவோமாக; புனித நம்பிக்கை வளர்வதாக; நிலையான மீட்பு உறுதி பெறுவதாக. எங்கள்.

எல் : ஆமென்.

### கொரோனா வைரஸ் தொற்று நோய் நெருக்கடியில் அன்னை மரியாவை நோக்கி மன்றாட்டு

தலைவர் : ஓ அன்னை மரியே!

எல் : நீர் எப்போதும் எங்கள் பாதையில் மீட்பு மற்றும் நம்பிக்கையின் அடையாளமாக ஒளிர்கின்றீர். சிலுவை அடியில் நின்று இயேசு பட்ட பாடுகளில் பங்கெடுத்து, உமது நம்பிக்கையில் உறுதியாக இருந்தீர். நோயாளிகளின் ஆரோக்கியமே! எங்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறோம்.

அனைத்துலக மக்களின் மீட்புக்குத் துணை நிற்கும் நீர், எங்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்து வழங்குவீர் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஆகவே, கலிலேயாவின் கானாவில் நடந்ததுபோல இந்த சோதனைக் காலத்திற்குப் பின் நாங்கள் எங்கள் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் மீண்டும் திரும்புவோம் என நம்புகிறோம்.

எங்கள் துன்பங்களைத் தம்மேல் ஏற்றுக்கொண்டு, துயரங்களைச் சுமந்து கொண்டு, சிலுவை வழியாக உயிர்ப்பின் மகிழ்ச்சிக்கு எங்களை வழிநடத்திய இயேசு கூறியபடி, தந்தையின் திருவுளத்திற்கு நாங்கள் இணங்கி வாழ்வதற்கு இறையன்பின் தாயே எங்களுக்கு உதவியருளும். ஆமென்.

ஓ இறைவனின் புனித அன்னையே, உமது பாதுகாப்பின்கீழ் நாங்கள் அடைக்கலம் தேடுகிறோம். மாட்சிக்குரிய புனித கன்னியே, சோதனைக்கு

உட்பட்டிருக்கும் எங்கள் விண்ணப்பங்களைப் புறக்கணியாமல் எல்லா ஆபத்துகளிலிருந்தும் எங்களை விடுவித்தருளும்.

**– திருத்தந்தை பிரான்சிஸ்**

## ஆசியுரை

தலைவர் : நன்மையே உருவான இறைவன் நமக்குத் தம் அருளை அளித்து, ஆசீரைப் பொழிந்து, எல்லாத் தீமைகளினின்றும் நம்மைக் காத்தருள்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : நம் புகலிடமாகிய இறைவன் நம் நம்பிக்கையை வளர்த்து, எதிர்நோக்கை உறுதிப்படுத்தி, நாம் இறுதிவரை அன்பிலும் அமைதியிலும் நிலைத்திருக்கச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : கருணை மிகுந்த கடவுள் நம்மை இரக்கத்துடன் கண்ணோக்கி, நம் திட்டங்களும் முயற்சிகளும் விருப்பங்களும் நிறைவேறச் செய்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக.

எல் : ஆமென்.

தலைவர் : இறையன்பிலும் பிறரன்பிலும் வாழ்ந்து சான்றுபகரச் சென்று வருவோம்.

எல் : இறைவா உமக்கு நன்றி!